# யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

## நிறுவுனர் நினைவுப் பேருரை

## 22.09.2011

பெருமதிப்புக்குரிய கல்லூரி அதிபர் அவர்களே, விருந்தினர்களே, பிரதி அதிபர் அவர்களே, அன்பார்ந்த ஆசிரிய குழாத்தினரே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர் சங்கத்தினரே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவருக்கும் எனது பணிவான காலை வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் இன்று சர்வதேச ரீதியாக எத்தனையோ தினங்களைக் கொண்டாடி வருகின்றோம். ஆசிரியர்தினம், மகளிர்தினம், முதியோர்தினம், சிறுவர்தினம் அந்த வகையில் நினைவு தினமும் இன்றியமையாதது. காலம் நினைவில் நிற்க வேண்டிய உன்னத நிகழ்ச்சிகளைக் கூட மறைத்து விடுகின்றது. இதற்காகத் தான் நினைவு தினங்களை வைத்திருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

நிறுவுனர் நிறைவு நாளும் பரிசளிப்பு விழாவும் நடைபெறும் இன்றைய பொன்னாளில் நானும் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். எனது நன்றிக்கடனைப் பூர்த்தி செய்வதற்கும் ஒரு பொருத்தமான நன்னாள், பொன்னாள் என எண்ணுகிறேன்.

எமது நிறுவுனர் அமரர் முதலியார் அத்தியார் அருணாசலம் J.P. அவர்களின் ஐம்பதாவது நினைவு தினம். என்றும், எங்கள் நினைவில் நிற்பவர். இதற்கு பல சான்றுகள் உண்டு வாழ்க்கை என்பது தன்னுடன் நின்று விடுவதில்லை தான் வாழும் சமூகத்தை அணைத்துக் கொண்டு வாழ்வது தான் வாழ்க்கையாகும். என்ற சமூக தத்துவத்தை வழங்கிச் சென்றுள்ளார். அவர் ஒரு பெரிய தனவந்தராக இல்லாவிட்டாலும் தனது நீண்டகால சேமிப்பை, சொத்துக்களை வாரி வழங்கினார் எல்லோரையும் ஒவ்வொரு செயலிலும், சிந்தையிலும் தன்னை நினைக்கும் படியாக இந்தப்பூமியில் எழுபத்து நான்கு ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தும் மறையாத எல்லோர் மனங்களிலும் வாழும் அமரரானார்.

நான் இப்பாடசாலையில் 1955ல் பாலர் வகுப்பில் சேர்ந்தேன் 06 வருடங்கள் அத்தியார் அருணாசலம் அவர்களை இப்பாடசலையில் பார்க்க கூடிய வாய்ப்பினைக் பெற்றிருந்தேன் நாம் பாடசாலைக்கு காலையில் வரும் போது ஐயா அவர்கள் நீண்ட வெள்ளை நிறக் காற்சட்டை, வெள்ளை நிறக்கோட், வெள்ளை நிறத் தலைப்பாகை, நெற்றியில் நீண்ட திருநீற்றுக் குறிகள் பூரணச்சந்திரன் போன்ற பிரகாசமான சந்தனப் பொட்டும், கம்பீரமான தோற்றத்தில் அவரது முகம் பூரணசந்திரன் போல் பிரகாசிக்கும். ஐயா அவர்கள் பாடசாலை மண்டபத்தில் உலா வரும் போது மண்டபம் நிசப்தமாகி விடும். ஆசிரியர்கள், மாணவர்கள் எழுந்து நிற்பார்கள்.

உருவத்தில் சிறயவராக தோன்றிய போதிலும் உயர்ந்த இலட்சியங்களை உள்வாங்கி உயர்ந்த மனிதராக தோற்றமளித்தார். உண்மையில் உறுதியும் உழைப்பில் ஊக்கமும் தொழில் திறமையும் தொண்டில் ஆர்வமும் இவரை வாழ்வில் வளம் பெற வழிவகுத்தது.

கொழும்பில் புகழ் பூத்த ஆங்கில வர்த்தகக்கம்பனியில் உயர்பதவி வகித்தார். சேவையால் உயர்ந்த அத்தியார் அருணாசலம் அவர்கள் ஆற்றிய சேவையைப் பாராட்டுமுகமாக ஓய்வு பெற்ற பொழுது ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை முதன்முறையாக அமுல்படுத்தினார்கள்.

மேலும் கல்லூரி வளவில் காரியாலயமாக விளங்கிய பழையகட்டிடம் கம்பனிக் காரர்களி னால் அவர்களின் ஆலோசனைக்கமைய கட்டிக்கொடுத்துள்ளார்கள். இன்றும் அது ஒரு உன்னதமான எச்சமாகத் திகழ்கின்றது. அக்கட்டத்திற்கு வேண்டிய புனர் அமைப்பு வேலைகளை கல்லூரியின் மைந்தர்கள் விரைவில் மேற்கொள்ள இருப்பதும் மகிழ்ச்சியளிக்கின்றது.

எமது ஸ்தாபகர் தனித்துவமான ஆளுமை படைத்தவர் (A Unique Peasowlity) ஈழமண்ணில் இறையில்லாத வள்ளல் தனித்து நின்று நிறுவிய கல்லூரி நிகரில்லாத வண்ணம் நீர்வேலி மைந்தர்கட்கும், அயல் ஊரவர்களுக்கும் அரிய பெருய சேவையை ஆற்றிவருவதால் மாணவர் தம் நினைவில் என்றும் நிலை நிறுத்தி அவரைப் போற்றுகின்றனர்.

ஆராய்ச்சிகள் மேற்கொண்ட பலருடன் உறையாடிய படியால் சமூக நோக்கு விரிவாக்கம் பெற்று சமூக விருத்திக்கு வித்திட்டவர் அரிய பெரிய சேவையை ஆற்றியவர்.

ஆங்கிலத்தைப் படித்திருந்தாலும் தமிழ் வாழ்ந்தால் நாம் வாழ்வோம். நாம் வாழ்ந்தார் தமிழ் வாழும் என்ற அடிப்படைத் தத்துவத்தோடு கல்லூரியை நிறுவினார். மனிதர்களின் அனுபவங்கள் தான் சரித்திரத்தைப் படைக்கின்றன. அவர்களின் விழிப்புணர்ச்சி தான் ஒரு புதிய சமூதாயத்தை அமைக்க வழிகாட்டும் என்ற கருத்தையும் உணர்த்தியுள்ளார்.

மகாபாரதத்தில் தருமன் தருமத்தின் வழிநின்றான். அந்தத் தருமம் அவரைப் புகழ்ந்தது. அவன் புகழ் நிலைத்தது அமரர் அத்தியார் அருணாசலம் அவர்கள் சேவை வழி நின்றார். அவர் புகழ் நிலைக்கின்றது.

அமரர் பண்பாட்டின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளார் சமூகத்துக்கு ஒரு பண்பாட்டுக் கடமையுண்டு என வற்புறுத்தியவர் இளைஞர்களுக்கு பண்பாட்டுச் செல்வங்கள் பற்றிய அறிவையும், விழிப்புனர்ச்சியையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். நவீன பூகோள மயமாக்கப்பட்ட உலகில் இளைஞர்கள் விருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் எதிர்மறைக்காரணங்களின் விளைவுகளைக் கருத்தில் கொண்டு எனது நாடு எனது பண்பாடு என்ற உணர்வுகளை இந்தியா போன்ற நாடுகன் ஏற்படுத்துகின்றன. நல்ல சிந்தனையை பொறுப்புள்ள மக்களை உருவாக்கும் தன்மையுடையது. எனவே நாங்களும் இயன்றவற்றைச் செய்ய வேண்டும்.

இக்கல்லூரியில் பாலர் வகுப்புத் தொடக்கம் உயர்தரம் வரை பதினைந்துவருடங்கள் கல்வி கற்றேன் ஆரம்பத்தில் திரு. V. G. சம்பந்தன் அவர்கள் அதிபராக இருந்தார். அவரைத் தொடர்ந்து திரு பிரம்மஸ்ரீ. ஸ்ரீனிவாசஐயர் அவர்களும் அவருக்குப் பின் பூ.க. இராஜரத்தினம் அவர்கள் ஆகிய மூன்று அதிபர்களின் கீழ் கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். இதன் வரை இருபத்தொரு அதிபர்கள் இக்கல்லூரி வளர்ச்சி பாதையில் சேவையாற்றினார்கள்.

இருபத்தோராவது அதிபராக தற்போது யா/ அதிபர் திரு. இ. குணநாதன் அவர்கள் சேவையாற்றுகின்றார். எனக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள் அனைவரும் தற்போது எனது மனக்கண்ணில் நிழல் ஆடுகின்றது. அதிபர், ஆசிரியர்கள் எமக்கு கூறிய அறிவுரைகள் இன்றும் எமக்கு வழிகாட்டியாக அமைகின்றன. "தன்மீது விழும் ஒவ்வொரு அடியும் தன்னை ஒரு சிறப்பான படைப்பாக மாற்றும் என்பது கல்லுக்கு தெரியவில்லை அது போல் அதிபர் ஆசிரியர்கள் எங்களுக்கு அடிப்பதும் எங்களை சிறந்த கல்விமான்களாக சமூகத்தில் சிறந்த பிரசையாக வாழ்ந்து தனக்கும் சுற்றத்தாருக்கும் சமூகத்திற்கும் நாட்டுக்கும் பயன் உள்ளவராக வாழ வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

கல்வியில் வளர்ச்சி பெருகி வருகின்றது. கற்பிப்பவர்கள் தம்மை இற்றைப்படுபத்திக் கொள்ளும் தேவை அவசியமாகிறது (Updatf) பெற்றோர் பழைய மாணவர்களின் பொருப்பும் பெருகின்றது. இதற்கு விளக்கம் தேவையில்லை.

இந்திய முன்னாள் ஜனாதிபதி இராதா கிருஷ்ணன் கூறியது பரிபூரணமான கல்விமான்களும் தமது இன்றைய தேவைக்கு ஏற்ப புலமையும் உடைய ஆசிரியர்களுமே. இன்றை உலகில் மிகப்பெரிய தேவை எனவே கற்க உரிய இடமளிக்கும் உன்தமான பண்பு (Scholastic Meaitocracy) வலுப்பெற வேண்டும். நிறுவுநர் கனவுகள் நனவாக வேண்டும். அவரை கல்லாக நிறுத்திவிட்டோம் அவர் சாதனைகளை மறந்துவிட்டோம். என எவரும் கூறாவண்ணம் எல்லோரும் உழைப்போமாக. காலங்கள் மாறினாலும் எமது நன்றிக்கடனே ஆழமானது மாறாது. நான் இன்று பேசுகின்றேன் என்றால் இது அத்தியார் இந்துக்கல்லூரி கொடுத்த பிச்சை. இந்த உறவுகளின் மூச்சில் நினைவுகளை மேலும் நிலைப்படுத்திக் கொள்வோமாக.

அன்பார்ந்த மாணவர்களே, மாணவிகளே, இன்று எமது பாடசாலை 82ஆவது ஆண்டிலே சகல துறைகளிலும் வளர்ச்சி பெற்று ஆயிரம் பிறைகண்ட கல்விச்சேவையிலே பிரகாசித்துக் கொண்டிருக் கிறது. இப்பாடசாலையின் அதிபர் திரு. இ. குணநாதன் அவர்களை நான் நன்கு அறிவேன் அவர்கள் தென்மராட்சிப்பிரதேசத்தைப் பிறப்பிடமாக கொண்டவராயினும் திருமணப்பந்தம் காரணமாக எமது கிராமத்தில் கால்பதித்தார். இருந்தும் இக்கிராமத்தின் மீதும் எமது கிராமத்தின் மாணவர்கள் மீதும் கொண்ட பேரன்புகாரணமாக 2002ஆம்ஆண்டு தொடக்கம் 24மணிநேரமும் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்கு ஆற்றினார். இதற்கு சான்றாக ஒவ்வொரு வருடமும் பரிசளிப்பு விழாவிலே சமர்ப்பிக்கின்ற அறிக்கையில் பாடசாலையின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. அவருக்கு பக்கபலமாக பிரதிஅதிபர் திருமதி. தயாராணி மனோரஞ்சன் ஆசிரியையும் கடமை அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். ஆசிரியை அவர்களும் எமது கல்லூரியிலே கல்வி பயின்று பேராதனைப்பல்கலைக்கழக பட்டம் பெற்று ஆசிரியராக நியமனம் பெற்று தான் கல்வி பெற்ற இப்பாடசாலையின் மீது பற்றுக்கொண்டு இங்கே ஆசிரியராகவும் பின் பிரதிஅதிபராகவும் உயர்வு பெற்று சேவையாற்றுவது கல்லூரிக்கு பெருமை சேர்க்கின்றது. அவரது தந்தையார் திரு. சின்னத்துரை ஆசிரியர் அவர்களும் இப்பாடசாலையின் சிறந்த ஆசிரியராக அர்ப்பணிப்போடு சேவைபுரிந்தார். அவரிடம் நான் கல்வி பயின்றுள்ளேன்.

மேலும் இப்பாடசாலையில் தகைமைசார் ஆசிரியர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்போடு சேவையாற்றி வருகின்றனர்.

பாடசாலை ஸ்தாபகரின் வம்சவெளிக்குடும்பத்தினர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பழைய மாணவர் சங்கத்தினர் வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு தேவையான பங்களிப்புக்களை வழங்கி வருவது பாராட்டுக்குரியது. எனவே அன்பார்ந்த மாணவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவேன்றால்

உங்களுக்கான சகல தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு சிறந்த அதிபர் உங்களுக்குக் கிடைத்திருக்கின்றார். அது நீங்கள் பெற்ற பெரும்பாக்கியமாகும்.

துறைசார் சிறந்த ஆசிரியர்கள் வளமாக உள்ளன அத்துடன் இலவசபாடநூல்கள், இலவச சீருடைகள் கற்பித்தல் சாதனங்களுக்கான தரஉள்ளீட்டு நிதிகள் சிறந்த நூலகம், சிறந்த கணனி வசதிகள் சிறந்த விளையாட்டு மைதானம் போன்ற தேவைகள் யாவும் தேசிய பாடசாலைகளுக்கு நிகரான தரத்துக்கு பாடசாலைக்குரிய வளங்களை திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றது. பாடசாலை நிர்வாகம் அத்துடன் அதிபர் அவர்கள் தன்னுடைய காலத்தில் ஒரு சிறந்த நீச்சல்தடாகமும் அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளார். இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயம்.

இந்த நிலையில் மாணவர்கள் ஆகிய நீங்கள் அயராத முயற்சியுடனும் ஆர்வத்துடனும் தன்னோக்கத்துடனும் கல்லூரியின் சகல வளங்களையும் பயன்படுத்தி கல்வியில் சிறந்த வல்லவர்களாக வரவேண்டியது உங்கள் கடமை பொறுப்பும் ஆகும். இதில் நீங்கள் தவறுவவராக இருந்தால் உங்கள் எதிர்கால வாழ்க்கை வளங்களை தொலைத்தவர்ஆவீர்கள். எனவே கல்விக்கான உங்களது சந்தர்ப்பங்களை தவறவிடாதீர்கள் முயற்சி திருவினையாக்கும் நாளை நமதே இறைவன் அருளால் வெற்றியுடன் வாழ்வீர்களாக வாழ்த்துகின்றேன்.

இன்றைய நிறுவுனர் நன்னாளில் எனக்கும் சந்தர்ப்பமளித்து கௌரவித்த பாடசாலை சமூகத்துக்கு எனது இதையம் கனிந்த நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. பகவத்சிங்கம்**
**பழைய மாணவர் *A.H.C***
**ஓய்வு நிலை அதிபர்**

# இன்றைய மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் வகிபங்கு

ஒரு பிள்ளை பிறந்து " அம்மா" என்று அழைக்கும்போதே தாயானவள் "அம்மா" என்ற சொல்லைச் சொல்லிக் கொடுத்து கல்வியை ஆரம்பிக்கிறாள். இது இன்றைய செயற்பாடல்ல. அன்றைய செயற்பாடும் கூட.ஆனால் இன்றைய தாயானவள் அன்றுபோல் அல்லாது பிள்ளை முன்பள்ளிக்குச் செல்ல முன்பே பிள்ளைக்கு 1 - 10 வரையான எண்களையும் அ - ஔ வரையான உயிரெழுத்துக் களையும் அடுக்களையிலேயுள்ள பொருட்களைக் காட்டி அவற்றின் பெயர், நிறம், வடிவம், எண்ணிக்கை போன்ற பண்புகளையும் சொல்லிக் கொடுக்கின்றாள். பிள்ளையின் கல்விக்கும் குடும்பத்தின் தொழிற்பாடுகளுக்குமு் இடையில் நெருங்கிய தொடர்புகள் நீண்டகாலமாகவே இருந்து வருகின்றன. பிள்ளையின் உடல் விருத்தி, மனவெழுச்சி விருத்தி, சமூகத்துடனான இடைத்தாக்கம் ஒழுக்கம், சமயம், காலாச்சாரம், வாழ்க்கைப்பழக்க வழக்கங்கள், மொழியறிவு, தொழில்சார் கல்வி விருத்தி முதலியனவற்றில் அறிவை வழங்குவதில் பெற்றோர் முக்கிய பங்கேற்றிருந்தனர். கல்வியறிவுடைய பெற்றோரின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும் இன்று கல்வியறிவற்ற பெற்றோரும் இச்செயற்பாட்டில் முழுக்கவனம் எடுத்துள்ளனர்.

நவீன உலகில் கல்வியை வழங்குவதில் பாடசாலை முக்கிய இடம் பெறுகின்றது. எல்லோருக்கும் கல்வியில் சம அந்தஸ்த்தை வழங்குவதில் அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன. இதற்குப் பாடசாலை ஒரு முறைசார்ந்த கல்வியை வழங்கும் முக்கிய இடமாகக் காணப்படுகின்றது. இதனால் பாடசாலையில் கற்கும் மாணவர்களின் தொகை அதிகரித்தது. இவ்வதிகரிப்பை மேலும் விரிவுபடுத்த அரசாங்கம் இலவச பாடநூல், இலவச சீருடை முதலியன வற்றையும் தர உள்ளீட்டுப்பொருட்கள் மூலம் கல்விக்குத் தேவையான மேலதிக பொருட்களையும் வழங்கி வருகின்றது. அத்துடன் உயர்கல்விச் செயற்பாடு என்ற பெயரில் கற்றலில் இடர்படும் மேலதிக தேவையான மாணவர்களுக்கு அவர்களது செயற்பாடுகளை விரிவுபடுத்தக்கூடிய வகையில் மாணவர்களையும், பெற்றோரையும் ஒரே நேரத்தில் பாடசாலைகள் தமது பிள்ளைகளுக்கு எவ்வாறான கல்வியை எந்த முறையில் வழங்குகின்றன என்பதனைப் பெற்றோர் அறிய முடிகின்றது.

இவ்வாறு முறைசார்ந்த கல்வியை வழங்குவதில் அரசு முழுப்பொறுப்பையும் ஏற்று மாணவர் கல்விக்கு பல இலவச வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்ததைத் தொடர்ந்து பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர் தொகையும் அதிகரிக்கத் தொடங்கிற்று. இதனால் புதுப் புதுப் பாடங்களை அறிமுகம் செய்ய வேண்டிய தேவைகள் எழுந்தன. தொகை ரீதியான மாற்றங்களுடன் தராதர விருத்தியிலும் கவனம் செலுத்த வேண்டிய நிலை உண்டாயிற்று, ஒருசிலர் மட்டும் அனுபவித்து வந்த கல்வியை இன்று எல்லோரும் அனுபவிக்கும் வகையில் கல்வி நடவடிக்கைகள் மற்றும் பாடத்திட்டங்களில் மாற்றங்ள் ஏற்படுத்துப்பட்டுள்ளன. இதனால் கல்வியில் பல போட்டிகள் தோன்றின. குறிப்பிட்ட சில பொதுவான போட்டிப்பரீட்சைகள் மற்றும் வலய மட்டத்தில் நடைபெறுகின்ற மனைப்போட்டிகள், ஆக்கத்திறன் போட்டிகள் எனப் பல போட்டிகளும் உருவாக்கப்பட்டன. உதாரணமாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, தரம் 9 மாகாணமட்டப் பரீட்சை, க. பொ. த (சா/த), க. பொ.த, (உ/த) போன்ற பொதுவான பரீட்சைகளுக்குமு் வலயமட்டத்திலே நடைபெறுகின்ற அறநெறி மனனம், திருக்குறள் மனனம், வாய்பாடு மனனம், கோலப்போட்டி கல்வியின் முக்கிய நோக்கமாக மாறியபொழுது அப்பணிக்கு பாடசாலைகளை முழுமையாக நம்பியிருக்கும் நிலை மறைந்து இவ்வாறான போட்டிகளுக்கு ஆயத்தஞ் செய்வதில் பெற்றோரின் வகிபங்கும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதைக் காண முடிகிறது. இதனால் பாடசாலைக்கும் பெற்றோருக்குமான உறவு நிலையும் வலுவடைந்து வருகின்றது. இவ்வாறான போட்டிகள், பரீட்சைகளுக்குத் தமது பிள்ளைகளை அழைத்துவந்து போட்டிகள் நடைபெற வேண்டிய உதவிகளைச் செய்து தருவதிலும் பெற்றோரின் வகிபங்கு அதிகரித்துள்ளது.

தற்போது பாடசாலைகளில் வகுப்பறைக் கல்வி மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகள் மற்றும் விழாக்களும் அதிகரித்துள்ளன. இவற்றைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படுத்துவதற்கு தனியே மாணவராலும், ஆசிரியராலும், அதிபராலும் முடியாது. இங்கும் பெற்றோரின் பங்களிப்பு மிகவும் அவசியமாகத் தேவைப்படுவதை நாம் காணலாம். பாடசாலையின் வினைத்திறனுக்கு பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியம் என்ற கருத்து வலியுறுத்தப்படுவதுடன் இதற்கான சான்றுகளும் ஆய்வுகள் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றன.

இலங்கையிலே 1972இற்குப் பின்னர் தொடர்ச்சியாகக் கல்விக் கொள்கைகளிலும் பாடத் திட்டங்களிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இவ்வேற்பாடுகளில் மாவணவனுக்குத் தனியே வகுப்பறைச் செயற்பாடுகளுக்கு மட்டுமன்றி ஏனைய இணைபாடவிதானங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளன. வகுப்பறைச் செயற்பாடுகள் மாணவரின் அறிவை மட்டும் விருத்திசெய்வனவாக அன்றி வாழ்க்கைக்குத் தேவையான அனுபவங்களையும் பெறவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவனவாக அமைகின்றன. முன்னைய காலங்களில் ஆசிரியர் கூறிய விடயங்களை அப்படியே கேட்டுக் கிரகிக்கின்ற மாணவர்களே இருந்தனர். ஆனால் இன்று மாறிவரும் கணினி உலகிற்கு ஏற்ப பிள்ளைகளும் பல தகவல்களை வெவ்வேறு வழிகளில் தேடிக்கொள்வதில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு உதவியாக அவர்களது பெற்றோரும் பல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவும் தவறவில்லை. ஆரம்பக் கல்வி தொடக்கம் க. பொ. த. (உ/த) வரையில் பிள்ளைகள் தாமாகக் கற்க வேண்டிய விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன. வகுப்பறைச் செயன்முறைகள், செயற்திட்டங்கள், ஒப்படைகள் மூலம் கற்றல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாணவரின் மத்தியில் பல போட்டிநிகழ்ச்சிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அவை கற்றல் நடவடிக்கைகளில் திறம்பட ஈடுபட வேண்டும் என்ற உந்துதல்களை மாணவருக்குக் கொடுக்கின்றன. இவை பாடநூல்களுக்கு அப்பால் புதிய விடயங்களைத் தேடியறியும் தேவையை மாணவருக்கு உருவாக்கியுள்ளன. இவற்றுக்கு வகுப்பறையில் ஆசிரியரால் வழங்கப்படும் உதவிகளும், வழிகாட்டல்களும் மட்டும் போதாது. வீட்டில் தாய், தந்தை சகோதர், சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அயலவரின் உதவியும் தேவை. இவற்றின் விளைவுகள் தனியாள் அடிப்படைக் கற்றலுடன் கூட்டுக் கற்றலுக்கும் வழிகோலுகின்றன.

தமது பிள்ளைகளின் கற்றலின் எதிர்பார்ப்பிலும் ஈடுபாடு கொண்ட பெற்றோர் தமது பிள்ளைகள் கற்கும் பாடசாலைகள் எவ்வாறு தொழிற்படுகின்றன, எந்தமுறையில் கற்பித்தல் இடம்பெறுகின்றது என்பதனை அவதானிக்கின்றனர். கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்படும் உசாத்துணை நூல்கள் அரசால் வெளியிடப்படும் அறிவுரைப்பு வழிகாட்டிகள் என்பவற்றை எத்தனையோ பெற்றோர் தமக்குச் சொந்தமாகப் பிரதி எடுத்தோ அரச விற்பனை நிலையங்களில் பணங்கொடுத்து வாங்கியோ வைத்து தமது பிள்ளைகளுக்கு வீட்டிலே சொல்லிக் கொடுப்பதை நாம் எத்தனையோ இடங்களில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. பெரும்பான்மையான பெற்றோர் தமது பிள்ளைகள் கற்கும் பாடசாலையுடனும், கற்பிக்கும் ஆசிரியர்களுடனும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி ஆசிரியர் பார்வையில் நல்ல பெற்றோராகத் திகழ முற்படுகின்றனர். இதனால் பாடசாலையில் நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் பங்கேற்பதில் விருப்பத்துடன் நடக்கின்றனர் தமது பிள்ளைகளின் கற்றல் தொடர்பான விடயங்கள் சம்பந்தமான கலந்துரையாடுவதற்காக பாடசாலையால் அழைப்பு விடுக்கப்படும் போதெல்லாம் தமது ஏனைய வேலைகளையெல்லாம் இடைநிறுத்திவிட்டு பாடசாலைக்கு வருகின்றனர்.

வகுப்பறையில் நடைபெறும் விடயங்கள் பற்றி ஏனைய பெற்றோரிடம் கலந்துரையாடுதல் , பிள்ளைகளில் வீட்டு வேலைகளில் பங்கேற்றல், தமது பிள்ளைகளுக்கு கொடுத்துவிட்ட வீட்டு வேலைகளைப் பற்றி அந்த வகுப்பாசிரியர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அறிதல். எனப்பெற்றோர் தமது பிள்ளைகளின் கற்றலில் கூடிய வகிபங்கை வகிக்கின்றனர். எனினும் பிள்ளைகள் தொடர்பாகப் பெற்றோர் ஆற்றவேண்டிய பணிகளில் தெளிவின்னையும் உண்டாகலாம். அவ்வாறான சந்தர்ப்பங் களில் பெற்றோருடனான கலந்துரையாடல் மூலம் விளக்கங்களைக் கொடுக்கும் பொறுப்பு ஆசிரியருக்கு உண்டு.

எனினும், இன்றும் கூட தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளின் தெளிவில்லாத பெற்றோரும் இருக்கின்றனர். அவர்கள் கல்வி பற்றிக் கொண்டிருக்கும் தெளிவின்மை காரணமாகத் தமது பிள்ளைகளுக்கு வகுப்பறை செயற்பாடுகளுக்கு மேலதிகமாக வேறு எந்தக் கல்வியும் வேண்டியதில்லை. பாடசாலைகளில் கற்றல் மட்டும் நிகழ வேண்டும். வேறு எந்தச் செயற்பாடுகளிலும் மாணவனை ஈடுபடுத்தக்கூடாது என விரும்புவர். ஆனால் ஒரு சில பெற்றோரோ இணைபாடவிதானச் செயற்பாடுகளின் மாத்திரம் பங்குகொள்வதை நோக்கமாகக் கொண்டிருப்பர். இன்னும் சில பெற்றோர் தமது பிள்ளைகள் வகுப்பறைச் செயற்பாடுகளிலும் பங்கு கொள்ளவேண்டும். அதே நேரம் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் பங்கு கொள்ள வேண்டும் என விரும்புவர். இன்னும் சில பெற்றோர் பாடசாலைகளில் கல்வி மட்டுமின்றி ஒழக்கம், கலாச்சார விழுமியங்களையும் மாணவர்களுக்கு புகட்ட வேண்டும் என விரும்புவர். இவ்வாறு பல்வேறு வகையான எதிர்பார்ப்புக்களில் சிலது வெற்றிகாணலாம் சிலர் தோல்வியும் காணலாம்.

கல்விச்செயற்பாடுகளில் பெற்றோரின் பங்கேற்பு அதிகரிப்பதற்கு பெற்றோரைப்பற்றி பாடசாலைகளும் ஆசிரியர்களும் கொண்டிருக்கும் கருத்துக்களும் அபிப்பிராயங்களும் முக்கியமானவை. பாடசாலைச் செயற்பாடுகள் பற்றிப் பெற்றோர் எல்லோரும் அறிந்திருப்பர்என்று எதிர்பார்க்க முடியாது. பிள்ளைகளின் வகுப்பறைச் செயற்பாடுகளில் எல்லாப் பெற்றோரும் ஈடுபாடு காட்டுவர் எனவும் எதிர்பார்க்க முடியாது எனினும் எல்லாப்பொற்றோரையும் பாடசாலைக்கு வரச்செய்தும் தமது பிள்ளைகளின் வகுப்பறைச் செயற்பாடுகளில் முழுக்கவனம் எடுக்கச் செய்வதும் பாடசாலை யினதும் ஆசிரியரினதும் கடமையாகும். அதற்காகப் பெற்றோருக்குப் போதிய விளக்கமளிப்பதும் புதிய மாற்றங்களுக்கு ஏற்ப பெற்றோரின் உதவியைப் பெறும் வகையில் பெற்றோருடைய விழிப்புணர்வு, தேர்ச்சி, நம்பிக்கை ஆகியவற்றை உருவாக்குதல் ஆசிரியரின் பொறுப்பாக உள்ளதுடன் இவ்விடயத்தில் எழுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதும் இலகுவான விடயமாக அமையாது.

தற்போது பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு எவ்வளவு தான் புதிய கருவிகள் புதிய உத்திகளைப் பயன்படுத்திக் கற்பித்தாலும் பெற்றோர் மூலம் கிடைக்கும் உதவிகளும் வழிகாட்டல்களுமே அதிக பயனைத் தந்துள்ளன. பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்விக்கு வழங்கும் உதவிகளும் ஒத்துழைப்புகளும் மாணவரின் வினையாற்றல்கள் வளர்ச்சியடைய உதவுகின்றன.

பிள்ளைகளின் முதல் 5 வயதுகளில் கல்வி வழங்கும் பொறுப்பு பெற்றோர் கைகளில் தங்கியுள்ளது. எனினும் தற்போதுள்ள முன்பள்ளிக் கல்விக் கொள்கைகள் பெற்றோர் பிள்ளைகளுக்கு

கற்றலில் உதவும் ஆற்றலை வலியுறுத்துகின்றன. பெற்றோர் பிள்ளைகளுக்கு கற்றலில் உதவும் ஆற்றலை விருத்தி செய்வதால் பிள்ளைகளின் வினையாற்றல்கள் அதிகரிப்பதுடன் கற்றலில் இருசாராரது மனப்பாங்குகள் மாறவும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. என ஸ்ரீவின்ஸன் (Stevens 1984) குறிப்பிட்டுள்ளார். இவரது ஆய்வு முடிவின்படி தொழிலாளர் வகுப்பினைச் சேர்ந்த பெற்றோரும் தமது பிள்ளைகளின் வாசிப்பு மற்றும் ஏனைய மொழிசார்ந்த செயற்பாடுகளில் வழங்கிய ஒத்துழைப்பு பிள்ளைகளின் தராதரத்தை மேம்படுத்தியுள்ளமை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

அண்மைக்காலத் தரவுகளின் படி அறிவுப் பெருக்கம் நிகழும் செல்நெறிகளின் படி அறிவானது ஒவ்வொரு 10 ஆண்டுகளிலும் இரண்டு மடங்காகின்றது. இச் சந்தர்ப்பத்தில் தற்பொழுதுள்ள அறிவு காலாவதியாகலாம் அல்லது போதாமற் போகலாம். கல்விக்காக ஆசிரியர்களில் மட:டுமே தங்கியிருத்தல் போதிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் தாமதங்களை ஏற்படுத்தலாம். வீட்டில் பெற்றோர் மூலம் வாய்ப்புக்களை விரிவுபடுத்தல் அவசியமானது என மா. கருணாநிதி அவர்கள் தமது "கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அண்மைக்காலங்களில் ஏனைய துறைகளில் ஏற்படுகின்ற மாற்றமானது கல்வியிலும் செல்வாக்குச் செலுத்துவதால் பெற்றோர் ஒவ்வொருவரும் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் விழிப்புடன் செயற்பட வேண்டும். போதிய உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கி கணினி உலகில் புதிய சவால்களுக்கு முகம்கொடுத்து வாழக்கூடியவர்களாகத் தமது பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டும்

**உசாத்துணை நூல்**

கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள் - மா. கருணாநிதி